## September 7, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. லண்டன் கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தினார் முதல்வர் மு.க.ஸ்டாலின். மேலும் லண்டனில் கார்ல் மார்க்ஸ் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.
2. சிறப்பு பொருளாதார மண்டலத்திலுள்ள காட்டுப்பள்ளி அதானி துறைமுகம் இந்தியாவிலேயே அதிக அளவில் தனிப்பட்ட சிப்பங்களைக் கையாண்டு சாதனை படைத்துள்ளது.
   i. 35,000 டன் சோடா சாம்பல் சிப்பங்களை கையாண்டதன் மூலம், இந்திய துறைமுகங்களில் அதிக அளவில் தனிப்பட்ட சிப்பங்களை கையாண்ட பெருமையை காட்டுப்பள்ளி அதானி துறைமுகம் பெற்றுள்ளது.
   ii. இந்தச் சாதனை மூலம், தென்னிந்தியாவில் அதிக அளவில் சிப்பங்களை கையாளும் துறைமுகமாக காட்டுப்பள்ளி அதானிதுறைமுகம் விளங்குகிறது.
   iii. சென்னைக்கு அருகில் உள்ள இந்தத் துறைமுகம் அனைத்து வகை தரமான சேமிப்பு கிடங்கு கப்கள், சிப்பங்களை கட்டும் இடம், இயந்திரங்களைக் கொண்டு ஏற்றுமதிக்கான பொருள்களை விரைவாகவும், சீராகவும் கப்பல்களில் ஏற்றுவது போன்ற வசதிகளை பெற்றுள்ளதால் தமிழ்நாடு மட்டுமின்றி அண்டை மாநிலங்களிலும் ஒரு தனித்தன்மையை பெற்றுள்ளது என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. இந்திய உற்பத்தித் துறை, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் முந்தைய 17 ஆண்டுகள் காணாத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது குறித்து சந்தை பகுப்பாய்வு நிறுவனமான ஹெச்எஸ் - பிசி இந்தியா சர்வீசஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
   i. மதிப்பிடும் நாட்டின் உற்பத்தித் துறை செயல்பாடுகளை குறியீட்டு எண்ணான பிஎம்ஐ (பர்ச்சேசிங் மேனேஜர்ஸ் இன் டெக்ஸ்) கடந்த ஜூலை மாதத்தில் 59.1- ஆக இருந்தது. அது ஆகஸ்ட் மாதத்தில் 59.3- ஆக உயர்ந்துள்ளது. இது, முந்தைய 17 ஆண்டுகளில் காணாத அதிகபட்ச பிஎம்ஐ ஆகும்.
   ii. மதிப்பீட்டு மாதத்தில் இந்திய உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தித் திறன் அதிகரித்து இந்த வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது.
   iii. இத்துடன், தொடர்ந்து 40- ஆவது மாதமாக உற்பத்தித் துறைக்கான பிஎம்ஐ 50-க்கும் அதிகமாக உள்ளது.
   iv. அது 50-ஐ தாண்டினால் துறையின் ஆரோக்கிய வளர்ச்சியையும் 50-க்கு கீழ் இருந்தால் துறையின் பின்னடைவையும் குறிக்கிறது.
4. பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் புதிதாக மாற்றியமைத்துள்ள அமைச்சரவையின் மிக முக்கிய பொறுப்புகளுக்கு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
   i. பிரிட்டன் துணைப் பிரதமராக பொறுப்பு வகித்துவந்த ஏஞ்சலா ரெய்னர், கடந்த மே மாதம் சொந்த வீடு வாங்கும் போது உரிய முத்திரைக் கட்டணங்களைக் கட்டத் தவறியதாக குற்றச்சாட்டு எழுந்தது. அதையடுத்து, அவர் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.
   ii. ஆளும் தொழிலாளர் கட்சியின் முக்கிய தலைவரான அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து, அரசில் புதியசீர்திருத்தங்களைக் கொண்டுவரும் நோக்கில் பிரதமர் கியர் ஸ்டார்மர் அமைச்சரவையை மாற்றியமைத்தார்.

iii. முக்கியத்துவம் வாய்ந்த உள்துறை அமைச்சர் பொறுப்புபாகிஸ் தானில் பிறந்த ஷபானா மஹ்மூதுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் உள்துறை அமைச்சரான இவெட் கூப்பர் வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே நிதியமைச்சர் பொறுப்பை ரேச்சல் ரீவ்ஸ் வகித்துவரும் நிலையில், நாட்டின் மூன்று முக்கிய அரசுப்பதவிகளை முதல் முறையாக தற்போது பெண்கள் வகிக்கின்றனர்.

5. பரஸ்பர வரி விதிக்கப்பட்டு, தங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள நாடுகளின் குறிப்பிட்ட பொருள்களுக்கான கூடுதல் வரியை விலக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

i. இந்த உத்தரவு அமலுக்கு வரவுள்ளது. புதிய உத்தரவின் கீழ், கிராஃபைட், டங்ஸ்டன், யுரேனியம், தங்கக் கட்டிகள் உள்ளிட்ட உலோகங்களுக்கு பரஸ்பர வரிகள் விலக்கப்பட்டுள்ளன. ஆனால், சிலிகான் பொருள்கள், ரெசின், அலுமினியம் ஹைட்ராக்ஸைடு ஆகியவற்றுக்கு பரஸ்பர வரிகள் தொடரும்.

ii. விமான உதிரிபாகங்கள், மருந்து பொருள்கள், அமெரிக்காவில் உற்பத்தியாகாத காபி, சிறப்பு மசாலாப் பொருள்கள், அரிய உலோகங்கள் ஆகியவற்றுக்கு வரி விலக்கு விரைவில் அமலாகும். இது ஐரோப்பிய யூனியன், ஜப்பான், தென் கொரியா ஆகியவற்றுடனான வர்த்தக ஒப்பந்தங்களை செயல்படுத்த உதவும்.

iii. விண்வெளி, மருத்துவம், நுகர்வோர் மின்னணுவியல் உள்ளிட்ட துறைகளில் பயன்படும் முக்கியப் பொருள்களுக்கும், ஆன்டிபயாட்டிக்ஸ் போன்ற மருந்துகளுக்கும் வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

iv. இந்த மாற்றங்கள் தேசிய பாதுகாப்பு அவசரநிலையை கையாள்வதற்கு அவசியம் என்று டிரம்ப் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. சமையல் பாத்திரங்கள், மரப் பொருள்கள், அழகு சாதனங்கள் உள்ளிட்ட தினசரி உபயோ கப்பொருள்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த தடையில்லாத வகையில் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், வரைவு தரநிலைவழிகாட்டுதலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

i. தினசரி உபயோக தயாரிப்புகள் எளிதில் உணரக் கூடியதாகவும், செயல்படக் கூடியதாகவும், புரிந்துகொள்ளக்கூடியதாகவும், வலுவானதாகவும் இருக்க வேண்டும் என்று சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட 'பிஓயுஆர்' அணுகுமுறை அடிப்படையில் தரநிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016-இன் விதிமுறைகளுக்கு உட்பட்டு மத்திய மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுத் துறை இந்த வரைவு வழிகாட்டுதலை தயாரித்துள்ளது.

ii. இதில், தினசரி பயன்பாட்டுப் பொருள்களுக்கான தரநிலைக்கு 20 பிரிவுகளின் கீழ் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, சமையலறை பாத்திரங்கள் முதல் உணவு பேக்கேஜிங், அழகு சாதனப் பொருள்கள், ஆடைகள், மரப் பொருள்கள், குழந்தைகள் நலன்காக்கும் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், மின் தூக்கிகள், சுய சேவை செயல்பாடுகள் வரை இந்த வரைவு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

iii. அதன்படி, சமயலறையில் பயன்படுத்தக் கூடிய சமையல் பாத்திரங்கள், பாட்டில்கள், உணவு பேக்கேஜிங் பொருள்கள் கையில் நன்கு பிடிப்பதற்கு ஏதுவானதாகவும், மீண்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் உள்ளதாகவும்,

பார்வைக் குறைபாடுடையவர்கள் தொடு உணர்வில் அறிந்து கொள்ளும் வகையில் 'பிரெய்லி' மற்றும் விளக்கக் குறியீடுகளுடனும் வடிவமைக்கப்பட வேண்டும்.

7. யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டி ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் நடப்பு சாம்பியன் ஜேக் சின்னர் - ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் ஆகியோர் மோதுகின்றனர். அவர்கள் இருவரும் தொடர்ந்து மோதும் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் இறுதி ஆட்டம் இதுவாகும்.
8. பஞ்சாபில் கடந்த சில ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு கொட்டித் தீர்த்த மழையால் மாநிலம் முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. இதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 46-ஆக உயர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. சட்லஜ், பியாஸ் மற்றும் ராவி ஆகிய நதிகளின் நீர்மட்டம் உயர்வு மற்றும் வழக்கத்தைவிட அதிக அளவிலான மழை போன்ற காரணங்களால் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பஞ்சாபில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
9. முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி, பிரிட்டன் நாடுகளுக்கு ஒருவார கால பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 30-ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டார்.
   i. முதலில் ஜெர்மனி சென்ற முதல்வர், அங்கு பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுடனும், முதலீட்டாளர்களுடனும் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து, லண்டன் நகருக்குச் சென்ற அவர் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டார்.
   ii. இந்துஜா குழுமம் உள்பட பல்வேறு பெருந்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுடன் ஆலோசனைகளை நடத்தி முதலீடுகளை ஈர்த்தார். இரு நாடுகளிலும் மேற்கொண்ட பயணத்தின் மூலமாக ரூ.15.516 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் 17,613 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

10. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

   i. இம்மானுவேல் மேக்ரான் - பிரான்ஸ் அதிபர்
   ii. பெஞ்சமின் நெதன்யாகு - இஸ்ரேல் பிரதமர்
   iii. கெய்ர் ஸ்டார்மர் - இங்கிலாந்து பிரதமர்